## 29. மெய்ம்மார்க்க விளக்கம்.

### திரு நேரிசை.

***பண் - கொல்லி.***

**நீ**ரகம் பெருகு நாக நிருபனார் சுதைவார்க் கொங்கைப்
பீரகங் குளிர மாந்திப் பிரமனார் சிரசிற் குட்டி
ஏரகத் தமர்ந்த தேவை யிகனிசி சரரைக் காய்ந்த
தீரனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 1

**மா**வளை யரிக்கு நேமி வழங்கிய தணிகைச் சேயைக்
கோவரர் பதியை ஞானக் குழவியைக் குமர வேளை
ஆவியர் தேவா வானை யறிஞர்க ளகத்திற் றூங்குந்
தேவனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 2

**பொ**ய்தபு மயோத்தி ராமன் போற்றிய குருந்தை ஞானச்
சைவனைத் தார கத்தின் சதுர்தனை விளக்கி னானைப்
பையுளில் பரம யோகர் பரிவினில் வெளியாந் திவ்விய
தெய்வம தன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 3

**த**ன்னிக ரில்லா தானைத் தனிப்பரஞ் சுடரை ஞான்றும்
மன்னுயி ரனைத்து மோம்பி மலரடி யிருத்தம் மானை
என்னக மிருக்கும் வேந்தை யோர்ச்சிகா வளத்தி லேறு
தென்னனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 4

**வெ**றிநுக ரளிகண் மூசு மென்சுருட் குறமின் னேந்து
பொறிமுகை யழுந்து மொய்ம்புப் புனிதனைப் புனிதர் கோனைக்
குறிதிரி பேது மில்லாக் குகனைமஞ் சுமையாள் பங்கன்
சிறுவனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 5

---

**5.** *பொறிமுகை ஏந்து குறமின் எனக் கூட்டுக. தேமல் படர்ந்த தனங்களைத் தாங்கிய குறமகளாகிய பிராட்டியிடம் என்னும் பொருள் கொள்க.*
***அழுந்தும்*** = *அத்துவைதமாக விரவி நிற்கும்.* ***மொய்ம்பு*** = *வன்மை.*

**க**வலைமா கடலில் வீழ்ந்த கறையனேன் கரிசை நூறி
அவனையே யேத்த வாணை யயர்ந்ததண் கருணை யானை
மவுனிக ளகநி லாவு மாணிக்க மதனை வேற்கைச்
சிவமதை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 6

**வ**ல்வினை துமிக்குந் தேவை மறைகளை நொடித்த தேவை
நல்வினை யாளர் நாவி னவின்மனு வினுக்காந் தேவைப்
பல்கணம் வாழ்த்தும் வேளைப் பரமபுங் கவர்க ளேத்துஞ்
செல்வனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 7

**கா**ந்திசெய் யரணத் தானைக் கனைகழற் சரணத் தானைச்
சாந்தர்க ளறிவிற் றோன்று சவியுடைச் சுடரை யன்பர்
வேந்தனை விபுதர் கோனை விமலனை விமலர் வாழ்த்துஞ்
சேந்தனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 8

**து**ண்ணெனத் துடிதான் கொட்டி யாடிடு துரையை யூனக்
கண்ணினர் காணாக் கானக் கமலநான் முகன்மா லேத்தும்
விண்ணென விரிந்து ளானை மிளிர்வடி வேல்சூ லேந்து
திண்ணனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 9

**கா**ய்சரு கருந்து முவ்வோர் கருத்தினுக் கிசைந்து ளானை
ஓய்வறு புகழ்சொன் னோன்சொல் லொருவனைப் புறம்பா மார்க்கப்
பேய்கடா முணராச் சூரைப் பெருஞ்சிவ யோகர் பேணுஞ்
சேய்தனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 19ஆம் தேதி மங்களவாரம்.